பாடம்
03

## முயற்சியுள்ள பிள்ளை

ஒரு நாள் அமிலனும் ராதாவும் பாடசாலைக்குப் போகும் வழியில் கதைத்துக் கொண்டு போனார்கள்.

**அமிலன்** : ராதா, உங்கள் ஆசிரியர் எந்த நேரமும் நீங்கள் நல்ல பிள்ளை என்று சொல்லுவார்களே. அது ஏன்?

**ராதா** : ஒவ்வொரு நாளும் நான் வகுப்பைக் கூட்டிச் சுத்தம் செய்வதனாலாக இருக்கலாம்.

**அமிலன்** : ஆம், ஒவ்வொரு நாளும் பாடசாலை முற்றத்தைக் கூட்டுவதையும் பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதையும் நான் பார்த்திருக்கிறேன்.



ராதா : ஆம், அது மட்டுமல்ல சில நாட்களில் தரம் இரண்டு தங்கையர்களின் வகுப்பையும் கூட்டிச் சுத்தம் செய்வேன். வாசலையும் கூட்டுவேன்.

அமிலன் உங்களுக்கு இவ்வளவு வேலையும் செய்ய நேரம் இருக்கிறதா?

ராதா : ஏன் இல்லை. நான் காலையில் அம்மா எழும்பும் போதே எழுந்து விடுவேன். முதலில் புதியதொரு நாளைத் தந்த இறை தந்தைக்கு நன்றி கூறுவேன். இந்தப் புதிய நாளில் எனது வேலையைச் செய்து கொள்ள அவரின் உதவியை வேண்டுவேன். அன்றைய நாள் வேலைகளை இறைத் தந்தைக்கு ஒப்புக் கொடுப்பேன்.

அமிலன் : அதன் பிறகு

ராதா : அம்மாவின் வேலைகளுக்கு உதவி செய்வேன். வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்வேன்.

அமிலன் : அப்படியானால் பாடசாலை வேலைகளை எப்போது செய்வீர்கள்?

ராதா : பாடசாலை முடிந்து வீட்டிற்குச் சென்று பகல் உணவு சாப்பிட்டு முடிந்த பின் பாடசாலை வேலைகளைச் செய்வேன்.

அமிலன் : ஒவ்வொரு நாளும் இடைவேளைச் சாப்பாடும் நீங்கள் வீட்டிலிருந்துதான் கொண்டு வருகிறீர்களா?

ராதா : ஆம் ஒவ்வொரு நாளும் எங்களுடைய அம்மா எங்களுக்குக் காலையில் ஏதாவது உணவு செய்து தருவார்கள். நானும் அம்மாவுக்கு உணவு தயாரிக்க உதவி செய்வேன். என்னுடைய சாப்பாட்டுப் பெட்டியை நானே கழுவி எனக்குத் தேவையான அளவு உணவையும் அதில் போட்டுக் கொள்வேன்.

**அமிலன்** : உங்களுடைய கை எழுத்தும் மிகவும் அழகானது என்று எல்லோரும் சொல்லுவார்கள்.

**ராதா** : எங்களுடைய அம்மாதான் எனக்கு எழுதக் கற்றுத் தந்தார்கள். என்னுடைய புத்தகங்களை ஒழுங்காக வைத்துக் கொள்ளவும் நல்ல புத்தகங்களை வாசிக்கவும் அடிக்கடி அம்மா என்னை ஊக்கப் படுத்துவார்.

**அமிலன்** : நீங்கள் விரும்பாதவைகளும் இருக்கின்றனவா?

**ராதா** : பகலாகும்வரை நித்திரை செய்வதை நான் விரும்புவதில்லை. நேரம் கழித்துப் பாடசாலைக்குச் செல்லுவது எனக்கு விரும்பமில்லை. தம்பி தாமதமாக எழுந்து பாடசாலைக்கு வெளிக்கிட நேரமாகும் போது, நான் சில வேளைகளில் சண்டை பிடிப்பதும் உண்டு.

**அமிலன்** : அது மட்டுமா?

**ராதா** : இல்லை, இன்னும் இருக்கிறது. நண்பர்களுக்குப் பொய் சொல்லிப் பகிடி செய்ய, புத்தகங்களில் தாள்களைச் கிழிக்க, ஏழைகளை ஒதுக்கி வைக்க நான் விரும்புவதில்லை.

**அமிலன்** : உங்களுக்கு விளையாட விருப்பமில்லையா?

**ராதா** : அப்படி ஒன்றுமில்லை. நான் பாடசாலையில் ஓய்வு நேரத்தில் எனது சக மாணவிகளுடன் விளையாடுவேன். வீட்டில் எனது தங்கையுடனும் பக்கத்து வீட்டுப் பிள்ளையுடனும் விளையாடுவேன்.

அமிலன் : உங்களிடம் நல்ல கதைப் புத்தகங்கள் இருக்கிறதா?

ராதா : எங்களுடைய அப்பா எங்காவது நல்ல புத்தகங்களைக் கண்டால் வாங்கிக் கொண்டு வந்து தருவார்.

அமிலன் : ஆனபடியால் தான் நீங்கள் அழகான கட்டுரைகள் வரைகிறீர்கள்.

ராதா : ஆம். நாம் நல்ல புத்தகங்களை அடிக்கடி வாசிப்போமானால் நமது அறிவிற்கு அவசியமானவைகளைக் கற்றுக் கொள்ள முடியும்.

அமிலன் : ராதா இருக்கிற படியால் குழு வேலைகள் செய்வதற்கு மிகவும் இலகுவாக இருக்கிறதாம். உங்களுடன் சேர்ந்து வேலை செய்வதிலும் சரியான மகிழ்ச்சியாகவும் இருக்கிறதாம் என்று சாந்தனும், நிமலும் சொல்லுகிறார்கள்.

ராதா : நானும் மற்றவர்களுடன் சேர்ந்து வேலை செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்குத் தெரிந்ததை நான் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். ஆனபடியால் தான் அவர்கள் என்னை விரும்புகிறார்கள்.

அமிலன் : ராதா ; நான் இன்று உங்களிடமிருந்து நிறையப் பாடங்களைக் கற்றுக் கொண்டேன். உங்களைப் போல் வேலை செய்ய நானும் விரும்புகிறேன். நல்ல பிள்ளை என்று பெயர் வாங்க விரும்புகிறேன்.

ராதா : மிகவும் நல்லது. நானும் உங்களுக்கு உதவி செய்கிறேன். எங்களுடைய அன்பு இறைத் தந்தைக்காக என்னால் இயன்றதை நான் உங்களுக்குச் செய்கிறேன். இறைத் தந்தை எங்களை நல்வழி நடத்துவார் என்று எங்கள் ஆசிரியரும் அன்றொரு நாள் எங்களுக்குச் சொல்லித் தந்தார்.

**அமிலன்** : ஆம் ராதா, நாம்சேர்ந்துவேலை செய்வோம். இறைத்தந்தையை மகிமைப்படுத்துவோம்.

**ஒப்படை**

1. இந்தப் படிவத்தை உங்கள் அப்பியாசக் கொப்பியில் வரைந்து அதனைப் பூர்த்தி செய்யுங்கள்.

| ராதாவிற்கு விருப்பமான வேலைகள் | விருப்பமில்லாத வேலைகள் |
|---|---|
| | |

2. நீங்கள் ராதாவைப் போல் நல்ல வேலைகள் செய்யுங்கள்,

**"சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடை செய்யாதீர்கள்" என்று இயேசு கூறுகிறார்.**